உ

ஓம் குஹாய நம :

திருப்புகழமிர்தம்

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5. விக்கிரம ஹு வைகாசி மீ 1உ இதழ் 2 No 2
மே மீ -1940

திருப்புகழ்

திருவாவினன்குடி (பழநி)

வரதா மணிநீ யெனவோரில்
வருகா தேதுதா னதில்வாரா
திரதா திகளால் நவலோக
மிடவே கரியா மிதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூ லறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனு புரிவாழ் பெருமாளே.

பதவுரை.

சரதா - சத்தியவடிவினரே! மறை ஓத - வேதங்களைச் சொல்லுகின்ற அயன்மாலும் - பிரமவிட்டுணுக்களாலும், சகல ஆகம நூல் - எல்லா ஆகம சாத்திரங்களாலும், அறியாத - அறிந்து கொள்ளமாட்டாத பெருமிதமுடைய வராகிய, பரதேவதையாள் - மகாதேவியாகிய உமையம்மையார், தருசேயே - பெற்றருளிய திருக்குழந்தையே! பழனுபுரிவாழ் - பழநியம்பதியில் உறைகின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! வரதா - வரத்தை வழங்குபவரே!, மணி நீ என - நினைந்தபடி வழங்கும் சிந்தாமணி தேவரீரே என்று,

ஒரில் - ஆராய்ந்துணர்ந்து அன்புசெய்தால், எதுதான் வருகாது - எண்ணிய எப்பொருள்தான் கிடைக்காது? (எல்லாம் கிடைக்கும்) அதில் வாராது - அப்படி அறுமுகக்கடவுள் அருளால் அடையாமல், இரதாதிகளால் - இரசம் முதலியவைகளைக் கொண்டு வாதித்த, நவலோகம் இடவே கரியாம் - ஒன்பது லோகங்களையுங் கூட்டி நெருப்பிலிட்டு ஊதுவதனால் எல்லாம் கரியாகவே போய்விடும், இதில் எது - இதனால் பயன் யாது? (ஒன்றுமில்லை).

பொழிப்புரை.

உண்மைவடிவினரே! வேதங்களை ஓதுகின்ற பிரமதேவராலும், விட்டுணுமூர்த்தியாலும், சகல ஆகம சாத்திரங்களாலும், அறியமுடியாத பரமேஸ்வரியார் ஈன்றருளிய திருக்குமாரரே! பழநிமலையில் வாழும் பெருமிதமுடையவரே! எல்லா வரங்களையும் எண்ணியவாறு வழங்கும் வரதரே! சிந்தாமணி தேவரீரே என்று ஆராய்ந்தறிந்து, உமது திருவடியில் அன்பு செய்தால் எப்பொருள்தான் கிடைக்காது? (எல்லாம் கிடைக்கும்) இதனையறியாமல், நவலோகங்களையும் நெருப்பிலிட்டு ஊதி இரசவாதஞ் செய்து அலைவதனால் கரியாகுமேயன்றி வேறு அதனால் அடையும் பயன் ஒன்றுமில்லை.

விரிவுரை.

வரதா:— தேவர்களுக்கும், அயன் அரி அரன் என்ற மூவர்களுக்கும், முனிவர்களுக்கும், மனிதர்களுக்கும், மற்று யாவர்களுக்கும் வரங்கொடுத்தருளுகின்ற வரதர் முருகப் பெருமான் ஒருவரேயாவர். "ஓம் பக்தாபீஷ்டவ்ரதாய நம:" "ஓம் ஆஸ்ரிதேஷ்டார்த்தவரதாய நம:" என்ற சுப்ரமண்ய மஹாமந்திரங்களாலும்,

"பிரமதேவர் வரதா முருக தம்பிரானே"
"வரதா முதலா மயில்வாகனனே" என்ற

சுவாமிகளது திருவாக்குகளாலும் இக்கருத்து நன்குவலியுறுமாறு காண்க. தேவரும் மூவரும் சூரபன்மனால் பன்னெடுங்காலம் வருந்தி "இனி உய்வுண்டோ?" என்று ஏங்கி எம் குமாரநாயகனை இறைஞ்சி எத்தி முறையிட, அவர்களது அலக்கணை யகற்றி

கேட்ட வரங்களையெல்லாம் வழங்கியருளினர்.

மணி நீ:— சிந்தித்ததைத்தரும் சிந்தாமணியும், தெய்வ மணியும் முருகவேளேயாம் என்று ஆராய்ந்து அறிந்து துதித்தால் வாராத பொருள் ஒன்றுமில்லை.

"அடியவ ரிச்சையில் எவையெவை யுற்றன
அவை தருவித் தருளும் பெருமா" ளாதலால்

எல்லாவற்றையும் விரைவிற் பெறலாம்.

"இரதாதிகளால்......சரியாம்":—

இரசவாதஞ் செய்து புடம்வைத்து நவலோகங்களையும் ஊதி ஊதி ஆசைவயத்தராய் அலைவதனல் பயன்கிடையாது.

"மறையோதும் அயன்மாலும்...............அறியாத பரதேவதையாள்":—

வேதம் அயன் மால் ஆகமங்கள் இவைகளால் அறியமாட்டாத அறிவு வடிவாக விளங்குபவர் அம்பிகை.

"மந்த்ராணும் மாத்ருகாதேவீ சப்தாணும் ஜ்ஞானரூபிணீ
ஜ்ஞானனும் சிந்மயாதீதா" —தேவியுபநிஷத்.

கருத்துரை.

உண்மைப் பொருளே! உமாசுதரே! பழனபுரி வாழ் பெருமாளே! தேவரீரை நினைத்தால் எல்லாம் சித்தியாகும். இரசவாதத்தால் யாதுபயன்? நினது திருவடிப் பேற்றைத் தந்தருள்வீர்.

அருத்தி வாழ்வோடு தனகிய மனைவியு முறவோரும்
அடுத்த பேர்களு மிதமுற மகவோடு வளநாடும்
தரித்த வூருமே யெனமன நினைவது நினையாதுன்
தனைப்ப ராவியும் வழிபடு தொழிலது தருவாயே
எருத்தி லேறிய இறையவர் செவிபுக உபதேசம்
இசைத்த நாவின இதணுறு குறமக ளிருபாதம்

பரித்த சேகர மகபதி தரவரு தெய்வயானை
பதிக்கோ ளாறிரு புயபழ நியிலுறை பெருமாளே.

பதவுரை.

எருத்தில் ஏறிய - இடபவாகனத்தின் மீது ஆரோகணித்தருளுகின்ற, இறையவர் - எப்பொருட்குந் தலைவராகிய சிவபெருமானுடைய, செவிபுக - திருச்செவியில் புகுமாறு, உபதேசம் - பிரணவ மந்திரோபதேசம், இசைத்த நாவின - மொழிந்தருளிய திருநாவை யுடையவரே !, இதணுறு குறமகள் - பரண்மிசை இருந்த வள்ளி நாயகியாரது, இருபாதம் பரித்த சேகர - இரண்டு திருவடிகளையும் தாங்கித் திருமுடியிலணிந்து கொண்டவரே ! , மகபதி தர வரு தெய்வயானை - தேவேந்திரன் செய்த தவத்தினால் மகவாக வந்தருளிய தெய்வயானையம்மையார், பதிக் கொள் ஆறிரு புய - பதியாகக் கொண்ட பன்னிரு புயாசலத்தையுடையவரே ! , பழநியில் உறை - பழநியம்பதியில் வாழ்கின்ற, பெருமாளே - பெருமையின் மிக்கவரே ! அருத்தி வாழ்வொடு - ஆசையை விருத்தி பண்ணுகின்ற உலக வாழ்வையும், தனகிய மனைவியும் - சரசஞ்செய்கின்ற மனைவியையும், உறவோரும் - சுற்றத்தாரையும், அடுத்த பேர்களும் - சிநேகிதர்களையும், இதம் உறு மகவோடு - இன்பத்தைத் தருகின்ற குழந்தைகளையும், வள நாடும் - வளம் பெற்ற நாட்டையும், தரித்த வூரும் - பொருந்தி வாழ்கின்ற ஊரையும், மெய்யென மனம் நினைவது - இவைகளே எப்பொழுதும் நிலைத்தவைகள் என்று எண்ணுகின்ற பொய் யெண்ணத்தை, நினையாது - எண்ணுமற்படிக்கு, உன் தனைப் பராவியும் - தேவரீருடைய திருவடியை நினைந்தும் துதித்தும், வழிபடு தொழிலது தருவாயே - காயத்தால் வழிபடுகின்ற தொண்டைத் தந்து அருள் புரிவீர்.

பொழிப்புரை.

இடபத்தின்மீது எழுந்தருளி வருகின்ற தனிப்பெருந் தலைவராகிய சிவபெருமானுடைய திருச்செவியில் புகுமாறு பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசித்தருளிய திருநாவையுடையவரே ! தினைப் புனத்தில் பரண்மிசை நின்ற வள்ளிநாயகியாரது திருவடிகளிரண்டையுந் தாங்கிச் சென்னிமேற் சூடியவரே ! நூறு பரிமேதங்களைச் செய்த இந்திரனது தவப்பயனால் திருக்குழந்தையாக வந்தருளிய தெய்வயானையார் பதியாகக் கொண்ட பன்னிரு புயத்தையுடையவரே ! பழநியம் பதியில் வாழ்கின்ற பெருமிதமுடையவரே ! ஆசையை விருத்தி பண்ணுகின்ற உலகவாழ்வை

யும், சாசமாகப் பேசி விளையாடுகின்ற மனைவியையும், சுற்றத்தாரையும், என்னை அடுத்துள்ள நண்பர்களையும், இன்பத்தை விளைவிக்கின்ற மக்களையும், வளம் பொருந்திய நாட்டையும், பொருந்தி வாழ்கின்ற ஊரையும் நிலைத்தவைகள் என்று எண்ணியிருக்கின்ற எண்ணத்தை யொழித்து (நிலை பேறுயுள்ள) தேவரீரது திருவடித் தாமரைகளை எண்ணித் துதித்து வாழ்த்தி வழிபடுகின்ற திருத்தொழிலைத் தந்து அருள் புரிவீர்.

விரிவுரை.

அருத்தி வாழ்வு :—

உலக வாழ்வு மேலும் மேலும் அவாவை வளரச் செய்வது. விடாய் கொண்டான் கடல் நீரை யருந்தினுற் போல், அவாவுற்றோன் அப்பொருளை யனுபவிப்பதால் அவாவடங்குதலிலது. மேலும் மேலும் வளரவே செய்யும்.

தனகிய மனைவியும் ... ... தரித்தவூரும் :—

மனைவி மக்கள் சுற்றம் ஊர் பேர் செல்வம் இவைகளே உயிர்க்கு உறுதிசெய்வன என்று எண்ணி எண்ணி வீணேயழியாமல் உயிர்க்குயிராகிய குகப் பெருமான் ஒருவரே மெய்ப் பொருள் என்று எண்ணி வழிபட வேண்டும்.

"உலகபசுபாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர்தந்தை மனைபாலர்
மலசல சுவாச சஞ்ச லமதாலென்
மதிநிலை கெடாமலுன்ற னருள்தாராய்."

எருத்தில் ஏறிய இறையவர் :—

சிவபெருமான் விடையின் மீது எழுந்தருளியுள்ளார். உலகமுழுவதும் அழிந்த பின் தருமம் ஒன்றே அழியாது நின்றது. தருமமொன்றே அழிவற்றது. மற்றதெல்லாம் அழிவனவாம். எல்லாமழிந்தும் தான் மட்டும் அழியாமல் நின்ற தருமம் சிவமூர்த்தியினிடம் இடப வடிவாகிச் சென்று அடைக்கலம் புக்கது. அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு கால்களுடன் நின்ற

தரும தேவதையைப் பெருமான் தமக்கு வாகனமாகக் கொண்டு அருள் புரிந்தனர். தருமமொன்றே இறைவனைத் தாங்குந்தகுதி யுடையது. தருமத்தின் மீது எழுந்தருளும் அப் பரமபதி ஒருவரே யாவர்க்குந் தலைவர். எப் பொருட்கும் இறைவர்.

குறமகளிருபாதம் பரிந்தசேகர:—

முருகர் வள்ளிநாயகியாரது திருவடியை வணங்கினர் என்பது எம்பிரானுடைய கருணையைக் காட்டுகிறது. குகமூர்த்தி தன்னைவிரும்பி நோற்ற ஆன்மாவை யாட்கொள்ளத்தானே எளிதில் வெளிவந்து வணங்கியும் ஆட்கொள்வர்.

"பணியா வென வள்ளிபதம் பணியுந்
தணியா அதிமோக தயாபரனே"
"குறமின் பதசேகரனே" —அனுபூதி.

விளையாட்டுத் தன்மையிலுள்ள குழந்தையைத் தாய்உணவு ஊட்டும் பொருட்டு வேண்டி "குழந்தாய்! உன்னைநமஸ்கரிக்கிறேன்; சாப்பிட்டுவிட்டுப் போய்விடு" என்று இரந்து நிற்றல் கண்கூடு. அது தயாவினல் நிகழும் நிகழ்ச்சி. இதுவேதான் வள்ளியை முருகன் வணங்கினர் என்பது.

கருத்துரை.

சிவகுருவே! வள்ளிகணவ! தெய்வகுஞ்சரி நாயக! பழநியாண்டவ! உலகவாழ்வை மெய்யென நினையாமல் தேவரீரது திருவடியில் வழிபடுந் தொழிலைத் தந்தருள்வீர்.



ஓம் குஹாய நம :

கந்தரலங்காரம்

(12வது - பக்கத் தொடர்ச்சி.)

தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபான்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே.

பதவுரை.

அன்று - அந்நாளில், மாவலிபால் - மகாபலிச் சக்கிரவர்த்தியினிடம், மூவடி படி கேட்டு - மூன்றடி பூமியை யாசித்து, மூது அண்டகூட - பெரிய அண்டகூடத்தின், முகடுமுட்ட - உச்சியில் முட்டும்படி, சேவடி நீட்டும் - சிவந்த திருவடியை நீட்டியளந்த, பெருமான் மருகன் தன் - பெருமை யுடைய விட்டுணு மூர்த்தியினது மருகராகிய முருகப் பெருமானது, சிற்றடி - சிறிய திருவடியானது, தாவடி ஒட்டு மயிலிலும் - பிரயாணத்திற் கெனச் செலுத்துகின்ற மயில்வாகனத்தின்மீதும், தேவர் தலையிலும் - தேவர்களு டைய சென்னியின்மீதும், என் பா அடி எட்டிலும் - அடியேன் திருவருள் துணைகொண்டு பாடிய பாக்களது அடிகளையுடைய ஏட்டின்மீதும், பட்டது அன்றோ - பட்டது அன்றோ? (இதுஎன்ன ஆச்சரியம்)

விரிவுரை.

தாவடி:— தாவடி-பிரயாணம்.

"கடிதுலகெங் கெனும் தா(வ)டி இட்டுவந்த
மயிலுமிலங்கலங் காரபொற் சதங்கை
கழலொலி தண்டையங் காலுமொக்கவந்து
வரமெனக் கருள்கூர்வாய்"
—திருப்புகழ்.

மயிலிலும்:---

எம்பிரானுடைய திருவடித்தாமரை படுமாறு அளப்பறு காலந் தவஞ்செய்ததால் அப்பாதம்படும் பெரும் பேற்றை மயில் பெற்றது.

முருக நாயகன் சீறடி முளரியிற் சிறுதாள்
பொருவின் முக்கணன் புயங்களு முமைமுலைப் பொருப்பு
மருவி வாழ்ந்தன சிறிதுநாள் மாமயிற் பெருமான்
ஒருவில் வைகலும் பொறுத்தன னென்னிலென் னுரைக்கேன்.

—உபதேசகாண்டம்.

தேவர் தலையிலும்:---

மூவர்முதல்வராகிய முருகக்கடவுளை தேவர்கள் நாள்தோறும் அன்புடன் வழிபட்டு வணங்குபவராதலால் அவர்களுடைய சென்னிமீதும் அப்பரமபதியின் பாததாமரை பட்டது.

“இமையவர் முடித் தொகையும் வனசரர் பொருப்புமென
திதயமு மணக்த மிரு பாதச் சரோருகனும்”

——திருவகுப்பு.

“ * * * * மயிலேறு மையன்
காலுக்கணிகலம் வானோர் முடியுங் கடம்பும்”

—— அலங்காரம்.

“வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா”

——அநுபூதி.

என் பாவடி ஏடு:--

பாவடி என்பதனை பா வடி என்றேகொண்டு பாக்களை எழுதியுள்ள என்றும் பொருள் கொள்வர். அடிகளோடு கூடிய பா என்றும் கொள்ளலாம்.

திருப்புகழை எழுதியுள்ள ஏட்டில் எம்பிரானுடைய திருவடி பட்டது என்பதனால் அதன் ஏற்றம் இனிது புலனாகின்றது. இறைவனுடைய முத்திரை பெற்ற (நோட்) நாணயம் போல் திருப்புகழ் எங்கும் செல்வாக்கைத்தரும்.

சேவடி நீட்டு:---

திருமால் மாவலியிடம் மூன்றடி மண்ணை யாசித்து திரிவிக்ரம வடிவத்தைக்கொண்டு மண்ணுலகையும் விண்ணுலகையும் திருவடியை அளவுகோல்போல் நீட்டி யளந்ததை விளக்குகின்றனர்.

சிற்றடி:---

முருகவேள் என்றுமகலாத இளமைக்காராதலால் சிறிய அடி என்றனர்.

கருத்துரை.

உலகமளந்த திருமால் மருகராகிய செவ்வேட்பரமனது திருவடித் தாமரையானது மயில்மீதும், தேவர்களது சென்னிமீதும், அடியேனுடைய திருப்புகழை எழுதியுள்ள ஏட்டிலும் பட்டது.

உ

ஓம் குஹாய நம:

சிவாநந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(13-வது பக்கத் தொடர்ச்சி)

(62) ஆநந்தா3ச்ருபி4ராதநோதி புலகம் நைர்மல்யதச்2 சாத3நம்
வாசாசங்க2 முகே2 ஸ்தி2தைஸ்ச ஜடராபூர்த்திம் சரித்ராம்ருதை:!
ருத்3ராக்ஷைர்ப4ஸிதேந தே3வ வபுஷோ ரக்ஷாம் ப4வத்3 பா4வநா
பர்யங்கே விநிவேச்ய ப4க்திஜநநீ ப4க்தார்ப4கம் ரக்ஷதி!!

பதவுரை.

தேவ—தலைவரே!
பக்திஜநநீ—சேவையாகிய தாயானவள்
பக்தார்பகம்—பக்தனாகிய குழந்தையை
பவத்பாவநா பர்யங்கே — தேவரீருடைய தியானமாகின்ற கட்டிலில்
விநி வேச்ய—படுக்கச் செய்து
ஆநந்தாச்ருபி:—மகிழ்ச்சிக் கண்ணீரால்,
புலகம்—மயிர்க் கூச்செறிதலையும்
நைர்மல்யதம் — களங்கமற்ற மனத்தை யுடையவனா யிருத்தலென்னும்
சாதநம் — ஆடையையும், (பாவ மறைப்பு)
வாசா சங்கமுகே — (வேதமுதலிய) வாக்காகின்ற சங்கினுடைய முகத்தில்
ஸ்திதை:—இருக்கின்ற
சரிதாம் ருதை:—தேவரீரது சரித்திரங் களாகிற அம்ருதத்தால்
ஜடரா பூர்த்திம்ச—வயிற்றை நிரப்புதலையும்
ருத்ராக்ஷை: — உருத்திராக்க மணிகளினாலும்
பஸிதேந—திருநீற்றினாலும்
ரக்ஷாம்—காப்பு செய்தலையும்
ஆதநோதி—செய்கின்றாள்
ரக்ஷதி—தானும் காப்பாற்றுகின்றாள்.

பொழிப்புரை.

எம்பெருமானே! பக்தியென்னுந் தாயானவள் பக்தனென்னுங் குழந்தையை ஆனந்தக்கண்ணீரால் புளகிதமுற குளிப்பாட்டி தூய உள்ளமென்னும் ஆடையை உடுத்தி, வாக்கென்னும் சங்கினால் தேவரீரது சரித்திரங்களாகிய பாலைப்புகட்டி, விபூதி உருத்திராக்கங்களினால் காப்பு செய்து, உமது தியானமாகிய தொட்டிலிலிட்டு காப்பாற்றுகின்றாள். (தொடரும்)

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(16-வது பக்கத் தொடர்ச்சி)

சூரபன்மன் அழிந்த நகரத்தை உண்டாக்கிக் கொண்டு கொலுவீற் றிருக்குந் தருவாயில், முன் அவனால் ஏவப்பட்ட ஒற்றர்கள் முருகப் பெருமானுடைய சேனைகளையும் பிறவும் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து சூரபன்மனை வணங்கிக் கூறுவார்: "அசுரேந்திர! சிவகுமாரனாகிய முருகன் இலக்கத்தொன்பான் வீரர்களுடனும், நூற்றெட்டுப் படைத் தலைவருடனும் இரண்டாயிர வெள்ளம் பூதக்களுடனும் பூவுலகில் வந்து தாரகனைக் கொன்று கிரவுஞ்ச மலையைப்பிளந்து செந்திமா நகரில் வந்து இருக்கின்றான். இங்கு வரும் பொருட்டு ஒருதூதனை ஏவினான். அவன் இலங்கையை யழித்து இங்குவந்து மீண்டு போனான். முருகன் இங்கு வந்து போர் செய்ய எண்ணி யிருக்கின்றான். இதில் ஐயமில்லை" என்று கூறினார்கள்.

அது கேட்ட சூரபன்மன் தனது இளவலாகிய சிங்கமுகனையும் அறிவின்மிக்க அமைச்சரையும் மைந்தரையும் படைத்தலைவரையும் தருவித்து அவர்களை இருக்கவைத்து "அன்புமிக்கீர்! தேவரை நாம் சிறைசெய்ததனால் இந்திரன் சிவமூர்த்தியிடம் முறையிட, அவர் ஒரு குமாரனை நல்கி தேவரை சிறை நீக்கும் பொருட்டு நம்மிசை தூண்டினார். அக்குமூர்தை பூதங்களுடன் பூமிசை வந்து தாரகனையும் கிரௌஞ்சத்தையும் அழித்து கடற்கரையில் வந்து ஒரு தூதனை அனுப்பினான். அவன் இங்கு வந்து நகரையும், படையையும் அழித்துத் திரும்பினான். முருகனாகிய பாலனையும் பூதங்களையும் வெல்லுதல் வீரமன்றெனவறிருக்கின்றேன். இனி மேற்செய்வது யாதென ஆராய்ந்து கூறுமின்கள்" என்றான்.

மேதியென்னும் அமைச்சன் கூறுவான்: "மன்ன! விண்டுவை வென்ற தாரகனையும் மாயையின் மிக்க கிரவுஞ்சத்தையும் கணப் பொழுதி லழித்த கந்தனைக் குழந்தையென்று கூறுவது அறிவு டைமையாமோ? தாரகனது அளவற்ற சேனையை யழித்த வீரரை பூதரென்று இகழ்தல் புலமையாமோ? கடல் கடந்து வந்து நின் மகனைக் கொன்று நகரை யழித்து மீண்ட தீரனைத் தூதனென்று உரைத்தல் நன்றோ? அரிப் பிரமேந்திராதியர்களே ஓர் உருவாகி ஒற்றனாய் வந்தார்கள் போலும். தாரகன் இறந்தபோதே அப் பாலன்மேற் சென்று வென்றா யில்லை. அனற்பொறி சிறிதென்று அவமதிக்கலாமோ? முன்னரே அக்குமாரனை வென்றிருந்தால் நின் மகனும், இந் நகரும் அழிந்திடாவன்றோ? ஆதலால், படையுடன் விரைந்து சென்று சிவகுமாரனை வெல்லுதலே செய்யத் தக்க தாம்" என்றான்.

துர்க்குணன் என்னும் மந்திரி எழுந்து "நன்று, நன்று" என்று நகைத்துக் கூறுவான்: "வேந்தே மால் அயனாதி வானவர் மேல் போர் செய்யச் சென்றா யில்லை; நின் தம்பியரால் வென்றி பூண்டனை. இன்று பாலன் மேல் செல்லுதல் நின் பெருமைக் கேற்றதோ? இறுதியில் ஆயுளும், இணையில் ஆற்றலும், வரம்பில் வீரமும் தவத்தினால் பெற்றனை; அது பாலனையும் பசித்துழலும் பூதரையும் தூதனையும் வெல்லுதல் பொருட்டோ? ஆதலால், நீர் போர்செய்யப் போதல் நின்புகழுக்கு இழிவாகும். நின் படை வீரரை அனுப்பி வென்றி கொள்வாய்" என்றான்.

தருமகோபன் என்னும் அமைச்சன் எழுந்து பணிந்து "அசுராதிப! நீ சிறுவன்மேல் போர் செய்யச் செல்வது நவமணி பதித்த பொற்கொழுவைக் கொண்டு வரகுக்கு உழுவது போலாம். அப்பாலன் மூவரி லொருவனு மன்று; காலனு மன்று; நின்மைந் தரி லொருவனது வலிக்கு அப் பாலனும், பூதரும் எதிர் நிற்கார். நகத்தால் கிள்ளும் ஒன்றினை வாள்கொடு தடிவரோ? வேற்படை யை வெல்லுந் திற னின்றி தாரகன் மாண்டான். குறுமுனிவர் சாபத்தால் கிரவுஞ்சம் அழிந்தது; தவ வலி யின்மையால் வஜ்ஜிர வாகு மாண்டான். இது கருதி நீ போருக்குச் சென்றால் தேவர்

கை புரிவர். படைத் தலைவரில் ஒருவனை அனுப்பி வெல்லுதலே சாலச் சிறந்தது" என்றான்.

காலஜித்து கூறுவன்: "தலைவ! நேற்றுப் பிறந்த அச்சிறுவனும், பூதரும் போர் செய்ய வந்தபோது சிலரை ஏவிக் கொல்வதை விடுத்து, இதற்கொரு மந்திராலோசனையும் வேண்டுவதோ? பிரமனாதி அமரரை வெல்லும்போது எம்மை ஆராய்ந்தா யில்லை; இன்று இப்பாலன் பொருட்டு இத்தனை ஆராய்ச்சியோ? என்னை யேவில் கால பாசத்தால் ஒரு கணத்தில் கட்டிக் கொணர்வேன்" என்றனன்.

சண்டன் கூறுவன்: "நிருப! நின் மந்திராலோசனை நன்று; நன்று!! அப் பாலனையும், பூதரையும் அன்றே கொன்றிருப்பேன்! நின் ஆணைக்கஞ்சி வாளாவிருந்தேன். அடியேனை யேவுதி; மூவர் காப்பினும் பகைவரைக் கொன்று மீள்வேன்" என்றனன். அனலி, அக்கினிக் கண்ணன் முதலிய பிற அமைச்சரும் தத்தம் கருத்துக் கிசைய பற்பல கூறினர்.

பானுகோபன் எழுந்து வணங்கிக் கூறுவன்: "எந்தாய்! குன்றையும், நின் இளவலையும் குமரன் கொன்ற நாள் என்னை அனுப்பினையில்லை. தூதன்மீது பல் மூளைக்கா குழந்தையை அனுப்பிக் கொன்றனை. ஒற்றன் நின் னகரையழிக்கப் பார்த்துக் கொண்டிருந்து பழியுற்றனை. இவை நின் அறியாமையால் நிகழ்ந்து விட்டன. இப்போது அடியேனை யேவினுல் பாசத்தால் பாலன் முதலிய பகைவரையும் தேவரையுங் கட்டிக்கொணர்வன்" என்றனன். இரணியன் "தாதையே! குழந்தைமேல் என்தமையன்போருக்குப் போதலும் வசையே; என்னைஅனுப்புதி" என்றான். அக்கினிமுகன் "பிதாவே! சிவபெருமானிடம் அரிதிற் பெற்ற எண்ணிலா வரங்களும் வலிகளும் இருக்க ஒரு குழந்தையின் செயலைக் குறித்து எண்ணி இரங்குதல் நினக்குத் தக்கதோ? அடியேனை அனுப்புதி என் தம்பியைக் கொன்ற ஒற்றன் முதலியோரைக் கொன்றாலன்றி மீள்கிலேன் இது சத்தியம்" என்றான்.

சிங்கமுகாசுரன் எழுந்து ஏனையோரைக் கை யமைத்து, சூரனைத் தொழுது கூறுவான்: "அண்ணே! நின் மந்திரிகளும்,

மைந்தரும் நினிது நன்மையை நாடி நல்லுரை புகன்றாரில்லை. எண்ணித் துணிதலே அறிவுடைத்தாம். இந்திரன் முதலிய இமையவரை வருத்திய கொடியவ ரனைவரும் தம் ஆக்கமிழந்து அழிந்தாரே யன்றி பிழைத்தா ரொருவரு மில்லை. தேவரை மீன் பிடிக்குந் தொழிலில் ஏவினை; பொன்னகரைத் தீக்கிரையாக்கினை. தேவரைச் சிறை செய்தனை. இது உயிரில் விருப்பிலார் செய்கையாம். அதனால் அத் தீங்கு வந்தது. தேவரை சிறைமீட்கும் பொருட்டு ஆறுமுகக் கடவுள் வந்திருக்கின்றார். சிவபெருமான் நினக்கு ஆயுளாகத் தந்த 108 யுகமும் முடிவுற்றது. அதனை நீ அறிகிலை. சிவபெருமான், "உம்மை நம்சத்தி ஒன்றேவெல்லும்" என்று கூறியருளினர். அதனாலன்றோ சத்தி வேலால் தாரகன் அழிந்தான். வலியற்றவான வரை சிறையில் வைத்திருப்பதனால் நினக்கு யாது பயன்?

சுரவரைச் சிறுபாலரை மாதரைக் குறைதீர்
விரத நற்றொழில் பூண்டுளோர் தம்மை மேலவரை
யருமறைத் தொழிலாளரை யொறுத்தன ரன்றோ
நிரயமுற்றவுஞ் சென்று சென்றலமரு நெறியோர்.

ஆதலால், தேவரைச் சிறைவிடுத்தியேல் குமரவேள் நமது குற்றத்தைப் பொறுத்துப் போர்புரியாது திரும்பி கயிலை செல்வார். இன்றேல் நம்குலத்தையும், நின்னையும் அழிப்பர் என்பதுசாதம்" என்றான்.

இதுகேட்ட சூரபன்மன் கைகொட்டி நகைத்து வாய் மடித்து வெகுண்டு கூறுவன்: "தம்பி!

ஏவற்றொண்டு செய்தின்னமுங் கரந்த விந்திரற்குந்
தேவர்க்குஞ் சிறு பாலர்க்குஞ் சிவனுறை கயிலைக்
காவற் பூதர்க்கு மஞ்சினை கருத்தழிந்தனையோ
மூவர்க்கும் வெலற்கரியதோர் மொய்ம்புகொண் டுடையோய்.

சிவமூர்த்தி, நூற்றெட்டு யுகமென்றதும் சத்தி வெல்லுமென்றதும் யான் கேட்டிலேன்; புனைந்துரைக்கின்றாய். சிவபெருமான் தந்த வரத்தை மாற்றவல்லார் யாவர்? சத்தி வெல்லு மென்று அப்பரமபதி கூறியிருப்பினும் சிவத்திற்கு சத்தி அன்னியமில்லையே? வரங்கொடுத்தவர் அதனைமாற்றுவரென்பதுந்தவறே. நம்மைப்போல் பெருந் தவஞ்செய்து அழிவின்மையைப் பெறுமையால் தாரகனும்,

உ

ஓம் குஹாய நம:

கற்பு.

(21 - வது பக்கத் தொடர்ச்சி)

கதிரவன் மேற்கடலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். பறவைகள் இனிய ஒலியைப் பரப்பிக்கொண்டு கூட்டையும், பேட்டையும் நாடிச் சென்று கொண்டிருந்தன. பலர் சந்தியாவந்தனங்களை முறைப்படி முடித்துக்கொண்டு வெண்ணீற்றொளி வீச திருக்கோயிலுக்கு செல்வாராயினர். எந்தக் கடவுளும் பரவும் கந்தக் கடவுளின் திருமேனியைப்போல் செவ்வானம் சித்தத்தைக் கவருமாறு எழில்செய்தது.

அன்று வழக்கம்போல் சண்முக சுந்தரி நடுவீட்டில் விளக்கேற்றி மலரிட்டு கைகுவித்து, "தெய்வமே! என்கணவன் நீண்ட

குழவியாதலால் வஜ்ஜிரவாகுவும் அழிந்தார்கள். 1008 அண்டங்களையும் வென்று தனிஅரசுபுரியும் எனக்கு நிகர் யாவர்? தவஞ்செய்த சுராசுரர்களில் என்னைப்போல் புவனமெலாம் ஆண்டு அழிவிலாதிருந்தார் யாவர்? யான்தேவரைச்சிறைசெய்ததைக்கண்டும் மாலயன் முதலியோர் அஞ்சி வாளாவிருந்தனர். இப்பாலகனோ அழிவில்லாத என்னைஅழிப்பவன்? வஜ்ஜிர யாக்கையும் முடிவிலா ஆயுளும்பெற்ற என்னை ஒருவராலும் வெல்லமுடியாது.

எண்ணிலாததோர் பாலகனெனை வெல்வ னென்கை
விண்ணிலாத வன்றன்னையோர் கனியெனவெஃகிக்
கண்ணிலாதவன் காட்டிடக் கையிலாதவன்போ
யுண்ணிலாத பேராசையாற் பற்றுமா றொக்கும்."

என்று பற்பல கூறினன்.

(தொடரும்)

ஆயுளோடும் நிறைந்த செல்வத்தோடும் வாழ்தல் வேண்டும். என்னையும் குடும்பத்தையும் காப்பாற்றும் பொருட்டு காலையில் வெளியிற் போனவர் சுகமே திரும்பி வருதல்வேண்டும். அவர்செல்லும் வழிகள் நிழலுடன் கூடியதாய் வெப்பமின்றி குளிர்ந்திருத்தல் வேண்டும். பசிதாகத்தால் அவருடைய திருமேனி வாடாதிருத்தல் வேண்டும்'' என்று தொழுது கொண்டிருந்தாள். வெளியிலிருந்துவந்த அவள் கணவனாகிய சுப்ர தீபன் மனைவிக்குப் பின்புறமிருந்து அவள் தெய்வந்தொழுது தன்னுடைய நலத்தை நாடிவரமிரத்தலையும், மஞ்சள் பூசி திருநீறுங் குங்குமமும் அணிந்து கொண்டு மலர் முடித்து விண்ணிலிருந்து இறங்கிய அயிராணி போல் நிற்குங்கோலத்தையும், அவளது அரிய சிலத்தையும், கண்டும் கேட்டும் பரவசமுற்று கண்ணுங் கருத்துங் குளிர்ந்து அசைவற்று நின்றான். சண்முக சுந்தரி திடீரென்று திரும்பிப் பார்த்து கணவன் நிற்பதை நோக்கி எழுந்து வணங்கி, "ஆருயிர்க்காதல! காலந்தாழ்த்து வந்ததின் காரணம் யாது?'' என்று வினவினாள். சுப்ரதீபன் "பெண்ணே! நம்முடைய நகரத்தை நீதி வழுவாது அரசுபுரிந்த மன்னன் மாண்டுவிட்டானன்றோ? அவருக்குப் பதிலாக புதிய அரசன் ஒருவன் வந்திருக்கின்றான். அவன் கல்வியறிவு இல்லாத கயவன்; வேட்கைவிடாய் கொண்டவீனன்; நீதிநெறியில்லாப் பாதகன். அவனது கொடுமையால் பலர் துன்புறுகின்றனர். நகரஜனங்களனைவரும் நடுங்குகின்றனர். அம்மன்னன் திருத்துவாரின்றித் திரிகின்றனன்'' என்று கூறினான். அம்மாதரசு கணவனுக்கு இனிய உணவைக் கொடுத்து, வற்றக் காய்ச்சிய பாலையும் தந்து தன் கரத்தால் படுக்கையிட்டு கணவனைப் படுக்கவைத்து திருவடிகளை வருடி கணவன் தூங்கியபின் தான் உணவருந்தி துயில் புரிவாளாயினள்.

அதிகாலை துயிலைவிட்டெழுந்த சண்முக சுந்தரி வீட்டுக் காரியங்களை யெல்லாம் செய்து, கணவனுக்குக் காலையுணவைத் தந்தாள். சுப்ரதீபன் வெளியிற் சென்றான். அன்று மாலை வீட்டிற்குமுன் சண்முக சுந்தரி தண்ணீர் தெளித்துக் கோலமிட்டுக் கொண்டிருந்தாள். அந்நகரின் புத்தரசன் பவனிவந்து கொண்டிருந்தவன் அம்மங்கையைக் கண்டான். இபத்தையழகும் சாந்த

நிலையுந் திரண்டோருருவு கொண்டாலன்ன அம்மாதரசி மீது மையலுற்ருன். பெண்பித்து கொண்ட அக்காதகன் அவளை யின்னு ளென்றறிந்து கொண்டு அரண்மனை சேர்ந்தான். அவன் கண்ணிற்பட்ட பெண்கள் யாவராயினும் அவர்களை அவன் தன் கொடுமையால் மனைவியாக்கிக் கொள்வான். உடனே அப் பாதகன் சுப்ரதிபனை யழைத்து, "நின் மனைவியை நம் பள்ளி யறைக்கு அனுப்புதி; இன்றேல் நின்னுயிர் உடம்பில் நிலை பெருது" என்ருன்.

சுப்ரதிபன் மனம் நடுங்கி வீட்டிற்கு வந்து நிகழ்ந்ததை மனைவியிடங் கூறினன். சண்முகசுந்தரி உள்ளமும் உடலும் நடுங்கி, கண்ணீர்சொரிந்து, "தெய்வமே! என்னே என்விதிவசம், ஒருவன் அயலான் மனைவியை விரும்பினல் அதனைத் தடுத்து அற நெறியைப் பரப்புவது அரசன் கடமையன்ரே? தருமத்தை நடாத்தும் மன்னனே தவறினல் மற்று யாரிடம் இதனை முறை யிடுவேன். வேலி பயிரைமேய்ந்தால் என்செய்வது? ஆண்டவனே! நினது திருவடியைத் தவிர வேறு எனக்குக் கதியில்லை. ஏழைக் கிரங்கும் இறைவனே! நான் அரசனிடம் செல்லவில்லையானல் என் கணவன் உயிர்நீங்கும்; சென்ருல் என் கற்பழியும்; இரண்டும் எனக்கு மிகவும் வேண்டற்பாலன. கணவனையிழந்து யான்எவ் வாறு வாழ்வேன்? கற்பையும் இழந்து உயிர் வாழேன். காப் பாற்றுவது நின்கடன்" என்றுசிந்தித்து, கணவனைவணங்கி "பிரா ணேசா! என்னை யனுப்பவில்லையானல் தங்கள் உயிர்நீங்கும். அனுப்பினல்என்கற்பு நீங்கும். இரண்டையுங்காப்பாற்றுவதுஎன் பொறுப்பு. ஆகலால் என்னை அனுப்பி வையும். எனது கற்பின் திண்மையாலும் தங்கள் திருவடி பலத்தாலும் அரசனைச் சந்தித்து அவன் மனத்தை மாற்றிவிட்டு வருவேன்" என்ருள்.

சுப்ரதிபன் ஒருவாறு இசைந்தான். இரவு 8 மணிக்குமேல் மனைவியை யழைத்துக் கொண்டுபோய் அரசனிடம் விடுத்துவிட்டு உயிரைப் பிரிந்த உடம்புபோல் எண்ணுதன வெல்லாம் எண்ணி வீட்டிற்கு வந்து உண்ணுது படுக்கையிற் படுத்து புரண்டு

கொண்டிருந்தான். அவன் மனோ நிலையை என்னென்றெழுதுவது? சண்முகசுந்தரி அரசனது பள்ளியறையில் கொண்டுபோய் விடப்பட்டனள். அரசன் அவளைக்கண்டு விடாய்கொண்டோன் வானதியைக் கண்டவாறு உள்ளம் உவந்து தன்னை நன்முக அலங்கரித்துக் கொண்டு, சண்முகசுந்தரிக்கு நல்ல சீலைகளையும், நவரத்தினங்க ளிழைத்த பொன்னுபரணங்களையும் பழங்களையும் எடுத்துக்கொண்டு, பள்ளியறையில் நுழைந்தான். புலியைக்கண்ட மானிளம் பிணைபோல் சண்முக சுந்தரி நடுநடுங்கினுள். "எம் பெருமானே! என் கற்பைக் காப்பாற்றுவது நின் கடனே; என் செய்வேன்; பாவியினிடமிருந்து எவவாறுதப்புவேன்" என்றுகலங்கினுள். காமபித்து பிடித்த அக் காதகன் "காதலி! இந்தா இந்த சீலையை யுடுத்திக்கொள்; இந்த திவ்யாபரணங்களை யணிந்து கொள்; இன்றோடு நின் மிடி நீங்கியது. அரசனுக்கு மனைவியாகும் பேறு பெற்றனை; நின் பாக்கியமே பாக்கியம்; எனக்கு நூற்றீறம்பது மனைவிகளிருக்கின்றூர்கள். அவர்களிட மில்லாத தனியன்பு நின்மேல் எனக்கு உண்டா யிருக்கின்றது. இந்தக் கட்டிலில் என்னுடன் அமர்வாயாக" என்றுன்.

சண்முக சுந்தரி கணவன் திருவடியை உள்ளத்தில் உன்னி, மன்னனை வணங்கி, "வேந்தர் வேந்தே! ஒரு சிறு விண்ணப்பம். தருமத்தை நிலைநாட்டும் பொருட்டே தாங்கள் செங்கோல் தாங்கியிருக்கின்றீர். இந்த ஊரில் ஒரு அநியாயம் நடை பெறுகின்றது. அதனைத் தாங்கள் கவனிக்காமல் இருக்கின்றீர். தாங்களே அதனைக் கண்டிக்கா விட்டால் மற்று யார் கண்டித்து அறத்தை நிறுத்த வல்லார்? அதனைத் தாங்கள் கேட்டு ஞாயத்தைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதாகத் தாங்கள் வாக்குறுதி தந்தால் அடிமையாகிய நான் தங்கள் உளத்திற்கு இசைவேன்" என்றுள். மன்னன் "மாதே! அப்படி அநியாயஞ் செய்யும் பாவி யாவன்? அவன் செய்யும் அநீதி யாது? விரைவில் விளம்பு; இப்போதே அவனைப் பிடித்து கண்டிக்கின்றேன். அவன் யாவனுயினுஞ் சரி அவனைத் தண்டிப்பேன்; சத்தியம். என் வாளைத்தொட்டுச் சத்தியஞ் செய்கின்றேன். தாமதியாமல் கூறுதி" என்றுன். சண்முகசுந்

தரி, "தரும துரையே! ஒரு ஏழை ஒரு வாழையை வைத்து உயிர் போல் வளர்க்கின்றான். அவ்வாழை குலை யீன்றால் அதுகொண்டு நலம் பெற எண்ணியுளான், அவனுக்கு அவ்வாழை மரத்தின் மீது மிக்க அன்பு. குலையீனும் பக்குவத்தில் அதனை நாள்தோறும் தண்ணீர் விட்டு வளர்க்கின்றான். ஒரு செல்வச் சீமானுக்கு 150 வாழைகளுள்ள ஒரு பெருந் தோட்டமுண்டு அப் பணக்காரன் வீட்டில் ஒரு விசேடம்; அதற்குத் தன் தோட்டத்திலுள்ள 150 வாழைகளில் ஒன்றை வெட்டி வாயிலில் கட்டாமல், அந்த ஏழை அன்பாக வளர்க்கும் வாழை மரத்தை வெட்டக் கத்தி கொண்டு போகின்றான். அதனைக்கண்ட ஏழை கண்ணீர் சொரி கின்றான். அப் பணமுடையவனை எதிர்க்கும் வலியின்றி யேங்கு கின்றான். இந்த அக்ரமம் இந்த ஊரில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தாங்கள் இதனை விசாரித்து நியாயத்தைச் செலுத்த வேண்டும். இதுதான் என் விண்ணப்பம்" என்று நாத் தழுதழுத்து இனிய குரலில் கூறினாள்.

அதனைக் கேட்ட வேந்தன் கண் சிவந்து, "மானே! அப்பாவி யார்? தனக்குரிய 150 வாழைகளில் ஒன்றைத் தன் விசேடத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளாமல் ஏழையின் ஒரு வாழையை வெட்டப் போவது என்ன கொடுமை; என்னே அறியாமை; அவன் எங்குளான்? கூறு. இப்போதே அவனை இவ்வாளுக் கிரையாக்குவன்" என்று படபடத்து வினவினான். சண்முக சுந்தரி "வேந்தே! அக் கொடுமையைச் செய்பவர் தாங்கள்தான். என்கணவனுக்கு யான் அன்பான ஒரே மனைவிதான். நாள் தோறும் அன்னர் தண்ணீர் கொடுத்து என்னைக் காப்பாற்று கின்றார். இனி என்னிடம் சந்ததி என்னும் குலையை எதிர் பார்த் திருக்கின்றார் தங்களுக்கோ 150 மனைவிகளிருக்கின்றார்கள். தங்கள் விருப்பத்தை அவர்களில் ஒருத்தியிடம் நிறைவேற்றிக் கொள்ளாமல் ஏழை மனைவியை விரும்புவது என்ன முறை? நீதியா? நெறியா? தருமமா? என் கற்பும் என் கணவன் வாழ்க்கையுமாகிய மரத்தை தங்கள் கொடுஞ் செயலாகிய கத்தியால் வெட்ட வருகின்றீரே? இதனை தெய்வஞ் சம்மதிக்குமா? சிறிது நேரஞ் சிந்தித்துப் பாருங்கள். தங்கள் சிறிய நேரத்தின் இன்பங் கருதி

எமது நீண்டகால வாழ்வைக் கெடுக்கலாமா? இவ்வாறு கொடுமை புரிவாரைத் தண்டிப்பது அரசராகிய தங்கள் கடமையன்றோ? தாங்களே அநீதியைச் செய்தால் நீதியை நிலைநாட்டுபவர் யார்? இதனைத் தாங்கள் சிறிது ஆறுதலான மனத்துடன் ஆராய்ந்தறிவீர்" என்று கல்லுங் கரையுமாறு கண்ணீருகுத்துக் கூறினாள்.

மன்னன் மனம் உருகியது. அவன் புது மனிதனாகிவிட்டான். அவளுடைய இதோபதேசத்தால் முற்றுந் திருந்தி விட்டான். தனது குற்றத்தை யுணர்ந்தான். கண்ணீர் வடித்தான். தன்னையே நொந்து கொண்டான். தன் அறியாமைக்கு வருந்தினான். அவள் பொன்னடியில் வீழ்ந்தான். "அம்மா! நீ யென்தாய்; நீ எனக்கு குரு; என் தெய்வமும் நீயே. கற்புத் தெய்வமே! அடியேனுடைய குற்றத்தை மன்னித்தருளல் வேண்டும். இனி மனைவியரைத் தவிர உலகிலுள்ள மாதரெல்லாம் என் உடன் பிறந்தாரேயாவர். என் பாவந் தீர இனி பரிகாரந்தேடுவேன். தாயே! அரை நொடியில் என்மனக்கல்லை உருக்கிய மாதரசே! துன்மார்க்கனைச் சன்மார்க்கனாக்கி விட்டனை. என் குற்றத்தைப் பொறுத்தருள்" என்று அவள் கால்மேல் வீழ்ந்து கெஞ்சினான். அம்மங்கைநல்லாள் மனமகிழ்ந்து, "அண்ணா! எழுந்திரு; கடவுள் உம்மை மன்னிப்பார். தாங்கள் திருந்திய நல்லுரையால் உள்ளம் உவந்தேன்" என்றாள்.

மன்னன் உடனே சுப்ரதீபனைத் தருவித்தான் அவனைப் பணிந்து நிகழ்ந்தது கூறி பலகோடி செல்வத்தைத் தந்து, "நண்ப! நின் மனைவியாகிய கற்புத் தெய்வத்தால் நான் திருந்தினேன். அவள் என்னுடைய தாய். உலகிலுள்ள எல்லாப் பெண்களும் என்சகோதரிகள். நீ என்னை மன்னிக்க வேண்டும்" என்று நயந்துரைத்தான். சுப்ரதீபன் தன் மனைவியின் கற்பின் திண்மையையும் கொடுங்கோலரசனையுந் திருத்தி விட்ட அவளது பொருளடங்கிய பொன்னுரைகளையும் எண்ணி இறும்பூதுற்று மனைவியுடன் தன் வீடு சென்றான். அரசன் அறவர்களை நன்கு மதித்துப் போற்றி வந்தான். கற்பின் மாண்பே மாண்பு.

(தொடரும்)

ஓம் குஹாய நம:

சூரவாதித்தன் கதை

(24-வது பக்கத் தொடர்ச்சி)

சிவபுராண சரிதம் :

(தலம்: மூக்கிச்சுரம்: உறையூர்)

[பஞ்சவர்ணேசுரர் - காந்திமதியம்மை வரலாறு:]

திரு. இராவ்சாஹிப் வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.

அச்சமயத்தில் நாக லோகத்தைச் சார்ந்த மகளிர் ஐவர் - அந்த நாக தீர்த்தத்தில் நித்தலும் மூழ்கி, லிங்கபூஜை செய்து "நாகநாதர்" என்னும் பெயரிய சிவலிங்கப் பெருமானைப் போற்றித் தம் ஊருக்குச் செல்லும் நியதி பூண்டவர்கள் - அரசன் வந்து நின்ற அந்தத் தினத்திலும் அங்ஙனமே போந்து, தீர்த்த மாடி, நீறுபூசி, அஞ்செழுத்தை நெஞ்சமுத்திச் செபஞ் செய்து, மலர் கொய்து குறைவிலா அன்பொடும் பூஜை செய்து கொண்டிருந்தார். அந்த ஐவருள் சுமுகி என்பவள் ரத்ன லிங்கத்தை வைத்து அதற்கு வாமதேவப் பரன் என்னும் திருநாமம் சூட்டி, ஞாயிறன்ன புகழ் சான்ற தலைவனைப் பெறவேண்டும் என்னும் கருத்துடன் அன்பு பொங்கத் துதிநிறை பூசனை செய்தாள். அவளுக்கு இளையவள் தேசராசி என்னும் மாது ஸ்படிக லிங்கத்தை வைத்து அதற்கு ஈசான தேவன் என்னும் திருப்பெயர் புனைந்து குண நிறை கொழுநனைப் பெற வேண்டும் என்னும் அவாவுடன் குற்றமில்லாத பூஜை செய்தாள். அவளுக்கு நேரிளையவள் கமலமாமுகி என்பாள் சுவண (பொன்) லிங்கத்தை வைத்து அதற்குத் தற்புருட தேவர் எனப் பெயரிட்டுக் கல்வி சான்ற மகிணனைப் பெறுவான் எண்ணிப் பூசனை புரிந்தாள். அவளுக் கிளையவள் சுலக்ஷணை என்னும் அணங்கு ஒப்பற்ற வைர லிங்கம் கொண்டு அதற்குச் சத்யோசாத மூர்த்தி எனப் பெயர் வைத்து ஒழுக்கங் குன்றாத

நாயகனை அடைய விரும்பி வழுவிலாப் பூஜை செய்தாள். இந் நால்வருக்கும் இளையவள் காந்திமதி என்கிற பாவை நல்லாள் நீல லிங்கத்தை இருத்தி அதற்கு அகோர தேவர் எனும் பெயர் சூட்டிச் சைவக் கணவன் கிடைக்க வேண்டும் என்னும் அவா வுடன் அன்பு குன்றாப் பூசனை இயற்றினள். இவ்வைவர் செய் யும் பூசனையை உற்று நோக்கி ஒரு புறம் நின்ற சூரவாதித்தன், பல மணிகளுள் இம்மணியே நன்மணி என்று மணியியல் தெரிந்த ஒருவன் பொறுக்கி எடுப்பது போல, இந்த ஐந்து மங்கையர்க ளுள் உத்தம குணத்துக் காந்தி மதியே சிறந்தவள் என உள்ளந் தேர்ந்து, அவள் அங்கங்களின் வனப்பை யெலாங் கண்ணாற் பருகி யும், அவள் மொழியின் வனப்பைக் காதாற் கேட்டும், அடங்காக் காதல் கொண்டவனாய் அவளருகில் மெல்லச் சென்றான். அரசன் வருவதைக்கண்டமூத்தபெண்கள்நால்வரும்தாம் பூசித்துக்கொண் டிருந்த சிவலிங்கங்களை அங்கேயே விட்டு அஞ்சி ஓடினர். இளை யவள் காந்திமதியோ அவர்கள் ஓடுவதைக் கண்டு அவர்கள்பூசித்த நான்கு லிங்கங்களோடு தான் பூசித்த லிங்கத்தையும் கையில் எடுத்துக் கொண்டு தன் ஊர் நோக்கி நடக்கத் தொடங்கினள். அப்போது அரசன் அவளை நெருங்கி அவள் ஆடையைத் தன் கையாற் பற்றி, "மயிலனையாய்! உன் தந்தை யார்? உன் பெயர் யாது? சொல் என்றான். காந்திமதியும் தன் துகிலைப் பற்றிய வேந்தனது வடிவழகைக் கண்டு உள்ளே மால் பூண்டவளாய் அதனை அடக்கி, "நான் நாகராஜன் மகள். என் பெயர் காந்திமதி என்று சொல்வார்கள். அஃதிருக்கட்டும். அரசே! நீ பற்றிய கலையை (ஆடையை) விடுதி" என்றாள். அதற்குஅரசன், "மாதே! வேட்டையாட வந்த நான் கையகப்பட்ட கலையை (கலைமானை) விடுவனோ?" என நயம்பட உரைத்தான் காந்திமதி, "அரச ரேறே! "பொழுது போமுன் நான் என் ஊர்போய்ச் சேருதல் வேண்டும். கலிங்கத்தை (ஆடையை) விடுதி" என்றாள். அரசன், "நான் தேச மன்னன் ஆயிற்றே; கைப்படு கலிங்கத்தை (குதி ரையை) விடுவனோ" என்றான். மங்கை நல்லாள், ஏந்தலே! பொழுது போகின்றது, தானையை (ஆடையை) விடுதி" என்றாள். வேந்தன், "மடந்தாய்! அரசனாய் உலகங் காப்பவன் தானையை (சேனையை) விடுவதுண்டோ" என மொழிந்தனன். இதைக்

கேட்ட பெண்ணி னல்லாள் "மன்னரேறே! சிரை (ஆடையை) நீ விடுதி' என்றாள். அரையன் "பாரையாள் மன்னர் சீரை (நன்மையை) விட்டால் பழுதுறுதோ ? " என்றான். தையனல்லாள் "வேந்தே! பாதலத் துறையும் எம் உறவினர்களுக்குக் கோபம் வருமுன்ன மாடை (முன்னம்-ஆடை) நீ விடுதி" என்றாள். அதற்கரசன் நலந் தருமாடை [நலந்தரும்-மாடை (பொன்)] விட்டால், அரச னாகிய நான் என் படைகளை எவ்வாறு போற்றுவது ? நான் என்ன துறவியா?" என்றான். 'இப்படிப் பொழுது போக்கினால் 'பன்னகம்' (நாகங்கள்) யாவும் இங்குச் சீறிவரும்" என்றாள் காந்திமதி. சிறையறுபட்டு வீழ்ந்த பன்னகங்கள் (மலைகள்) இங்கு எப்படி வரக்கூடும்" என்றான் அரசன். "அந்தோ! நீ பேசும் பேச்சுக்களை இங்கு வரும் அரவங்கள் கேட்டால் வருவது திங்கே' என்றாள் கன்னிகை. "காலும் செவியும் இல்லாத அரவங் கள் வருவதெப்படி? கேட்பதெப்படி? கூறுதி நங்காய்" என்றான் வேந்தன். காந்திமதி "வேந்தே! என்கலை (ஆடை) நின்பால் அடைதற்கு ஹேது என்ன கூறுதி" என்றாள். மன்னவன் 'காந்தி*'மதி' கலையடைதல் நாளும் சூர ஆதித்தன் பால் என்று உணராயோ? கலையுணர் செல்வி!" என்றான் அரசன். 'நீ என்ன கருதி என்னைத் தொடர்ந்து நிற்கின்றாய், மன்னரேறே!' என வினவினள் தோகை நல்லாள். "நீஎன்ன கருதி இங்குவந்து பூஜை செய்கிறாய், உண்மையை உரைத்தி, ஏழாய்!" என்றான் அரசன். "தந்தை தாயர்களின் உடன்பாடின்றி மணத்தல் எங்ஙனம் என் றாள்" மங்கை நல்லாள். 'காந்தர்வ விவாகம்' என்னும் மணவகை எதுக்குத்தான் ஏற்பட்டுளது" என்றான் அரசன். இருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் பொழுது சுமுகி முதலிய நால் வரும் விரைவிற் சென்று தமது தாதையை வணங்கி "அப்பா! நாங்கள் நாகதீர்த்த மருங்கில் வழக்கம் போல லிங்க பூசனை செய்திருந்தபொழுது ஆங்கு வீரக்கழல் விளங்கும் அரசன் ஒரு வன் வந்தான். அவன் வரவைக் கண்ட நாங்கள் துணுக்கமுற்று விரைந்தோடி வந்தோம். காந்திமதி சற்று விரையாளானாள்;

---

* சந்த்ர கலை ஒளிபெறுதல் ஆதித்தன் (சூரியன்) இடமிருந்து என்னும் உண்மையைக் குறிக்கின்றது.

அவள் சேலையை அரசன் அங்கையிற் பற்ற அவள் தமியளாய்த் தடைப்பட்டு நின்றாள்'' எனக்கூற, நாகராஜன் எரிவிழித்துக் கடுஞ் சினங் கொண்டு உடனே நாகதீர்த்தத்தை அடைந்தனன். தன் மகளின் சேலையைக் கைப்பற்றி நின்ற சோழ ராஜனைக் கண்டதும் கோபம் நீங்கி உவகை வெள்ளம் பொங்கத் தன் மகளை நோக்கிக் "குழந்தாய்! அஞ்சேல் என்றான். நாகராஜன் வரவைக் கண்ட அரசன் ஆடையைப் பற்றும் கரத்தை நெகிழ்த்தி மிக்க நாணத்துடனும் புன் சிரிப்புடனும் ஒதுங்கி ஒருபுறம் நின்றான். நாகராஜன் சோழர் பிரானுக்கு முன்வந்து "ஏ வீர! உனது கருத்தைத் தெரிவித்து ஒரு தூது விட்டால் நான் உன் திருமணத்துக்குத் தடை சொல்லுவேனோ! இச் செய்கை நன்றோ! ராஜ தந்திரந்தான் நீ விரும்பினை போலும். உலகறிய என் மகளை நீ மணஞ் செய்து கொள் என் மனம் உவப்ப அவளை உனக்கு அளித்தேன்'' என்றான். இதைக் கேட்ட அரசன் அளவிலா மகிழ்ச்சி யுற்றான். அச்சமயத்தில் மன்னனது சேனைகள் எல்லாம் அவனது பாதச்சுவடு கண்டு பற்றித் தொடர்ந்து வந்து ஆங்குச் சேர்ந்தன. நாகராஜனும் அரசனிடம் விடைபெற்று மீண்டான். அரசனும் காந்திமதியை ஒரு சிவிகையி லேற்றி, நாக நாதப் பெருமானைப் போற்றிப் பணிந்து, சிராமலையை வணங்கிப்போற்றி, இனிய வாத்தியங்கள் ஒலிப்ப, படைகள் சூழ்தர, பெண்கள் கவரி வீச, பரிமீதேறித் தலைநகரம் உறையூர் வந்து சேர்ந்தான். காந்திமதியும் அரண்மனையின் அந்தப்புரத்தில் ஓரிடத்திற் பெண்கள் சூழ வதிந்து வந்தாள்.

(தொடரும்)



உ

சிவமயம்:

திருப்புகழமிர்தம்

வாழ்த்துப்பா.

அருணகிரி யருணகிரி யென்றுமுன் னோருரைத்
தனரதைச் செவிமடுத்தோ
மல்லாமலே முகங்கண்டிலோமின் னொளி
லன்னருமிப்புவியினிற்
கருணாசம் பொழிதிருப் புகழ்க் குரைசொலக்
கற்றவர்கள் முயலாமையால்
கருதுகிரு பானந்தவாரிப் பெயர்கொண்டு
காசினியிலே யுதித்து
முருகனொரு புகழென்ற அடைதன்னி னின்றுயர்
முக்குணத்தேன் பிழிந்து
முகரிமையை மக்களுக்கே திருப்புகழமிர்த
மூலமா யுதவுகின்றார்
தருமினிய பத்திரிகை தளராது புவியினிற்
றண்ணளியுடன் நிலாவத்
தண்டமிழ்ப் பண்டிதன்றாய் வள்ளி நாயகன்
றாளிணை யிறைஞ்சுவோமால்.

வேறு.

தமிழது விழித்தெழுந்து தவழுமிக் காலந் தன்னிற்
கமழுறு வாசமோடு கவினுறத் தோன்றினாய் நீ
அமிழ்தெனத் திருப்புகழ்தா னள்ளியே மக்கட் கீந்து
சிமிலமீ துறுவிளக்காய்ச் சிறந்துமண் ணுலகில் வாழி.

வி. சந்திரசேகரக் குருக்கள்,
செ. 1075 சந்தாதார், மிதுலைப்பட்டி.